பாம்பாட்டிச் சித்தர்

பாடல்

உ

கடவுள் துணை.

பாம்பாட்டிசித்தர்பாடல்.

இஃது,

களத்தூர்த்தமிழ்ப்புலவர்

வேதகிரிமுதலியார் - குமாரர்

ஆறுமுகமுதலியாரால்

பிழையறத்திருத்தி

கன்னியுத்தூர்

திருவேங்கடமுதலியார்-குமாரர்

பாலசுந்தரமுதலியார்

அவர்களது

பாலாம்பிகை முத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

பவஞல் கார்த்திகைமீ

உ

சிவமயம்.

சரித்திரவரலாறு.

அரசன் ஒருவன் இறந்தகாலத்தில் ஒருசித்
தமது சரீரத்தை ஆலமரப் பொந்தில் மறைத்து
ஷணாக் காவல் வைத்துச் சிலநாளைக்குள் வரு
னென்று அவ்வரசன் சரீரத்திற் பரகாயப் பிர
மாயினர் அவர் நெடுநாளாகவராமையால் சீஷர்க
கிய சித்தர்கள் தங்களாசானாகிய வரசன்முன்
றிப்பாடல் களைப்பாடினார்கள்.

(பரகாயப் பிரவேசமாவது)கூடுவிட்டுக்கூ
ய்தலாம்.

ச ரி த் தி ர வ ர ல ா று

முற்றிற்று.

சிவமயம்.

பாம்பாட்டிசித்தர்பாடல்.

கடவுள்வணக்கம்.

தெளிந்துதெளிந்து தெளிந்தாடுபாம்பே-சிவன் *
சீர்பாதங்கண்டு தெளிந்தாடுபாம்பே *
ஆடுபாம்பே தெளிந்தாடுபாம்பே-சிவன் *
அடியிணைகண்டோ மென்றாடுபாம்பே. (க)

நீடுபதநமக்கென்றுஞ் சொந்தமென்றே *
நித்தியமென்றே பெருமுத்தியென்றே *
பாடுபடும்போது மாதிபதிநினைந்தே *
பன்னிப்பன்னிப் பரவிநின்றாடுபாம்பே. (உ)

பொன்னிலொளி போலவெங்கும்பூரணமதாய்ப்
பூவின்மணம்போலத்தங்கும் பொற்புடையதாய்
மன்னும்பலவுயிர்களின் மன்னிப்பொருந்தும்
வள்ளலடிவணங்கி நின்றாடுபாம்பே. (௫

எள்ளிலெண்ணெய் போலவுயிரெங்குநிறைந்த
ஈசன்பதவாசமல ரெண்ணியெண்ணியே
உள்ளுடையன்புபத்தி யோங்கிநிற்கவே
ஒடுங்கியடங்கித் தெளிந்தாடுபாம்பே. (௬

அண்டபிண்டந்தந்த வெங்களாதிதேவனை
அகலாமலேநினைந் தன்புடன்பணிந்
தெண்டிசையும்புகழ்ந் திடவேத்தியேத்தியே
ஏகமனமாகநாடி யாடுபாம்பே. (௭

சோதிமயமானபரி சுத்தவஸ்துவைத்
தொழுதழுதாவலறத் தொந்தோமெனவே
நீதிதவறாவழியி னின்றுநிலையாய்
நினைந்துநினைந் துருகியாடுபாம்பே. (௮

அருவாயுமுருவாயு மாதியாயும்
அந்தமாயுமொளியாயு மாகமமாயும்
இருவாயுங்குருவாயுஞ் சீவனையும்
செறிந்தவஸ்துவைப் போற்றியாடுபாம்பே. (௯

சுட்டிக்காட்டவொண்ணாத பாழ்சூனியந்தனைச் *
சூட்சமதியாலறிந்து தோஷமறவே *
ாட்டிப்பிடித்தோமென் றானந்தமாப்பை *
யெடுத்துவிரித்து நின்றாடுபாம்பே (அ)

எவ்வுயிருமெவ்வுலகு மீன்றும்புறம்பாய் *
இருந்துதிருவிளையாட் டெய்தியும்பின்னர் *
அவ்வுயிருமவ்வுலகு மாகியுநின்ற *
ஆனந்தவெள்ளங் கண்டாடுபாம்பே. (௯)

குருவணக்கம்.

ாற்றுமுடல்பொருளாவி தத்தமாகவே *
ானம்வாங்கிநின்ற வெங்கள்சற்குருவினைப் *
போற்றிமனம்வாக்குக் காயமூன்றும்பொருந்தப் *
புகழ்ந்துபுகழ்ந்து நின்றாடுபாம்பே. (௰)

பொய்ம்மதங்கள் போதனைசெய் பொய்க்குருக்களைப்
த்திசொல்லிநன்னெறியிற் போகவிடுக்கும் *
மெய்ம்மதந்தானின்னதென்று மேவவிளம்பும் *
மெய்க்குருவின் பாதம்போற்றியாடாய்பாம்பே (௰க)

வதப்பொருளின்னதென்றும் வேதங்கடந்த *
மெய்ப்பொருளைக்கண்டுமன மேவிவிரும்பிப் *
போதப்பொருளின்னதென்றும் போதனைசெய்யும் *
ஞானசற்குருதாள் கண்டாடாய்பாம்பே. (௰உ)

உள்ளங்கையிற்கனிபோல வுள்ளபொருளை
உண்மையுடன்காட்டும்வல்ல வுண்மைக்குருவைக்
கள்ளமனந்தன்னைத்தள்ளிக் கண்டுகொண்டன்பா
ச்-களித்துக்களித்து நின்றாடாய்பாம்பே. (

அங்கையிற்கண்ணாடிபோல வாதிவஸ்துவை
அறிவிக்குமெங்க ளுயிரானகுருவைச்
சங்கையறச்சந்ததமுந் தாழ்ந்துபணிந்தே
* தமனியப்படமெடுத் தாடாய்பாம்பே. (

காயநிலையறிகையைக் கண்டுகொண்டுபின்
கற்பநிலையுள்ளிற்கொண்டெக் காலமும்வாழுந்
தூயநிலைகண்ட பரிசுத்தகுருவின்
துணையடிதொழுது நின்றாடாய்பாம்பே. (

கூடுவிட்டுக்கூடுபாயுங் கொள்கையுடைய
குருவின்வல்லபமெவர்கூறவல்லவர்
வீடுபெறும்வகையை மேன்மேலுங்காட்டு
மெய்க்குருவைப் பணிந்துநின்றாடாய்பாம்பே (

அட்டதிக்குமண்ட வெளியானவிடமும்
அடக்கியகுளிகையோ டாடிவிளாவாங்
வட்டமிட்டுவலம்வரும் வல்லகுருவின்
மலரடிதஞ்சமென் றாடாய்பாம்பே. (

* தமனியம்- தங்கம்- இது-உவமையணி.

கற்பகாலங்கடந்தாதி கர்த்தாவோடும் *
கடமழியாதுவாழுங் காரணக்குரு *
பொற்பதமேதஞ்சமென்று போற்றுதல்செய்து *
பூரணசிந்தையோ டாடாய்பாம்பே. (௧௮)

வச்சிரத்திற்கோர்பழுது வாய்க்குமாயினும் *
வல்லுடம்புக்கோர் குறைவுவாய்த்திடாது *
மெச்சுகடமுள்ளவெங்கள் வேதகுருவின் *
மெல்லடிதுதித்து நின்றாடாய்பாம்பே. (௧௯)

பாம்பினதுசிறப்பு.

நாதர்முடிமேலிருக்கு நாகப்பாம்பே *
*நச்சுப்பையைவைத்திருக்கு நல்லபாம்பே *
பாதலத்திற்குடிபுகும் பைகொள்பாம்பே *
பாடிப்பாடிநின்று விளையாடுபாம்பே (௨௰)

வளைபுகும்போதே தலைவாங்கும்பாம்பே *
மண்டலமிட்டுடல்வளை வண்ணப்பாம்பே *
தளைக்கஞ்சிநின்றிடு சத்தியப்பாம்பே *
தலையெடுத்தே விளையாடுபாம்பே (௨௧)

குற்றமற்றசிவனுக்குக் குண்டலமானாய் *
கூறுந்திருமாலினுக்குக் குக்குடையானாய் *
கற்றைக்குழற்பார்வதிக்குக் கங்கணமானாய் *
காவாமலுளங் களித்தாடுபாம்பே. (௨௨)

* நச்சு-வலித்தல்விகாரம்.

மண்டலத்தைத்தாங்குமிகு வல்லமைகொண்டாய்
மாயனுக்குப்படுக்கைக்கு வண்ணப்பாயானாய்
கண்டபடைநடுங்கிடக் காட்சியும்பெற்றாய்
கண்ணேசெவியாகக் கொண்டாயாடுபாம்பே (உ௩

சந்திரனைச்சூரியனைத் தாவித்தீண்டினாய்
சங்கரனுக்காபரணந் தானுமாயினாய்
மந்திரத்திற்கடங்கினாய் மண்டலமிட்டாய்
வளைந்துவளைந்து நின்றாடுபாம்பே. (உ௪

சித்தர்வல்லபங்கூறுதல்.

எட்டுநாகந்தன்னைக்கையா லெடுத்தாட்டுவோம்
இந்திரனுலகத்தை யிங்கேகாட்டுவோம்
கட்டுக்கடங்காதபாம்பைக் கட்டிவிடுவோம்
கடுவிஷந்தன்னைக் கக்கியாடுபாம்பே. (உ௫

ஆதிசேடனாகினு மெம்மங்கையினாலே
ஆட்டிவிடுவோ மெங்களாக்கினைக்குள்ளே
நீதியோடடங்கியே நின்றிடச்செய்வோம்
நின்றநிலைதவறாம லாடுபாம்பே. (உ௬

தூணைச்சிறுதுரும்பாகத் தோன்றிடச்செய்வோம்
துரும்பைப்பெருந் தூணாகத்தோற்றச்செய்குவோம்
ஆணைப்பெண்ணும் பெண்ணை யாணுமாகச் செய்கு
வோம்-ஆரவாரித்தெதிராய் நின்றாடுபாம்பே. (உ௭

எட்டுமலைகளைப்பந்தா யெடுத்தெறிவோம் *
ஏழுகடலையுங்குடித் தேப்பமிடுவோம் *
மட்டுப்படாமணலையு மதித்திடுவோம் *
மகராஜன்முன்பு நின்றாடுபாம்பே. (௨௮)

மண்டலமுற்றுங்கையான் மறைத்திடுவோம் *
வானத்தையும்வில்லாக வளைத்திடுவோம் *
தொண்டருக்குச்சூனியஞ் சொல்லிக்காட்டுவோம் *
தோன்றலுக்குமுன்பு நின்றாடாய்பாம்பே. (௨௯)

மூண்டெரியுமக்கினிக்குண்மூழ்கிவருவோம் *
மூந்நீருள்ளிருப்பினு மூச்சடக்குவோம் *
தாண்டிவரும்வெல்புலியைத் தாக்கிவிடுவோம் *
தார்வேந்தர்முன்புநின் றாடுபாம்பே. (௩௰)

செப்பரியமூன்றுலகுஞ் செம்பொன்னாக்குவோம் *
செங்கதிரைத்தண்கதிராச் செய்துவிடுவோம் *
இப்பெரியவுலகத்தை யில்லாமற்செய்வோம் *
எங்கள்வல்லபங்கண் டாடுபாம்பே. (௩௧)

வேதன்செய்தசிஷ்டிகள்போல் வேறுசெய்குவோம்
வேதனையுமெங்கள்கீழே மேவச்செய்குவோம் *
நாதனுடன்சமமாக நாளும்வாழ்குவோம் *
நங்கள்செய்கையிதுவென் றாடுபாம்பே. (௩௨)

அறுபத்துநாலுகலை யாவுமறிந்தோம் *
அதற்குமேலொருகலை யானதறிந்தோம் *

மறுபற்றுசற்றுமில்லா மனமுடையோம் *
மன்னனேயாசானென் றாடுபாம்பே. (௯௩)

சீறுபுலியானையாளி சிங்கமுதலாய்ச் *
சிற்றடிக்குக்குற்றேவல் செய்யச்சொல்லுவோம் *
வீறுபெருங்காடுவனை யெங்கணுடனே *
விளையாடச்செய்வோமென் றாடாய்பாம்பே. (௯௪)

சித்தர்சமவாதம்.

வாசுகியையொருபக்க மன்னநிறுத்து *
பகுத்தானபதுமனை மறுபக்கம்வை *
தேசுலவுதக்கனைத்தன் றிக்கிற்சேரு *
செய்யபதுமனைக்கொள் சித்தரே. (௯௫)

அனந்தனையொருபக்க மாகநிறுத்தி *
அதன்பக்கங்குளிகனை யண்டச்சேரு *
கனங்கொண்டகார்க்கோடகன் காணக்காட்டுங் *
கடுஞ்சங்கபாலனைத்தா சித்தரே. (௯௬)

அட்டதிக்குஞ்சக்கரங்க ளாகக்கீறி *
அக்கோணமூலைகளி லக்கரஞ்சேரு *
இட்டமுடன்மந்திரத்தைச் செபித்துநில்லு *
சித்தந்தடுமாறுதே சித்தரே. (௯௭)

அட்டதிக்குஞ்சக்கரங்க ளமைத்துவிட்டோம் *
அவ்வவற்றிற்கக்கரங்க ளடைத்துவிட்டோம் *
வட்டநாகமிருக்கின்ற விடத்தில்விட்டோம் *
இனியென்னசெய்வதுசொல் சித்தரே. (௯௮)

நடுவாகவாதிசேடன் றன்னைநாட்டு *
நான்குதிக்குமந்திரித்த நீறுதூவு *
கடுவிஷங்கக்கவே கட்செவிகளைக்
கையிலெடுத்தாட்டுங்கள் சித்தரைரோ. (௩௯)

பொருளாசை விலக்கல்.

நாடுநகர்வீடுமாடு நற்பொருளெல்லாம் *
* நடுவன்வரும்பொழுது நாடிவருமோ *
கூடுபோனபின்பவற்றாற் கொள்பயனென்னே *
கூத்தன்பதங்குறித்துநின் றாடாய்பாம்பே. (௪௰)

யானைசேனைதேர்ப்பரி யாவுமணியாய் *
யமன்வரும்போதுதுணை யாமோவறியோம் *
ஞானஞ்சற்றுமில்லாத நாய்கட்குப்புத்தி *
நாடிவரும்படிநின் றாடாய்பாம்பே. (௪௧)

மாணிக்கமாமணிமுடி வாகுவலயம் *
மார்பிற்றொங்கும்பதக்கங்கண் மற்றும்பணிகள் *
ஆணிப்பொன்முத்தாரமம்பொனக்கடகம் *
அழிவானபொருளென் றாடாய்பாம்பே. (௪௨)

மாடகூடமாளிகைகள்வண்ணமண்டபம் *
மதில்சூழ்ந்தவரண்மனைமற்றுமுள்ளவை *
கூடவாராதென்றவந்தக்கொள்கையறிந்தோர் *
குலவாமல்வெறுப்பாரென் றாடாய்பாம்பே. (௪௩)

* நடுவன் - இயமன்.

மலைபோன்றசெம்*பொற்குவைவைத்திருப்பவர் *
*மறலிவருகையில்வாரிச்செல்வரோ *
அலையாமலகத்திலேயத்தன்பால்வைத்தோர் *
அழியாதென்றேதுணிந்தாடாப்பாம்பே. (௪௪)

பஞ்சணையும்பூவணையும்பாயலும்வெறும் *
பாழ்சுடுகாடதனிலேபயன்பெறுமோ *
பஞ்சண்டணம்போய்ச்சுடுநாறுமணங்கள் *
வருமென்றுதெளிந்துநின்றாடாய்பாம்பே. (௪௫)

முக்கனியுஞ்சர்க்கரையுமோதகங்களும் *
முதிர்சுவைப்பண்டங்களுமுந்தியுண்ணவாய *
மிக்கவுயிர்போனபின்புமண்ணைவிழுங்க *
மெய்யாகக்கண்டோமென்றாடாய்பாம்பே. (௪௬)

வண்ணப்பட்டும்வாசனையும்வாய்த்தகோலமும் *
வண்கவிகையாலவட்டமற்றுஞ்சின்னமும் *
திண்ணமுடனெயமபுரஞ்செல்லுங்காலத்தில் *
சேரவரமாட்டாவென்றாடாய்பாம்பே. (௪௭)

மக்கள்பெண்டிர்சுற்றமருமக்கண்மற்றவர் *
மாளும்போதுகூடவவர்மாள்வதில்லையே *
தக்கவுலகனைத்தையுந்தந்தகர்த்தனைத் *
தாவித்தாவித்துதித்துநின்றாடாய்பாம்பே. (௪௮)

* பொற்குவை-பொன்காசு.

* மறலி- யமன்.

கானலைமானீரெனவேகண்டுசெல்லல்போல் *
காசினிவாழ்வினைமூடர் கண்டுகளிப்பார் *
மேனிலைகண்டார்கள் வீணாய்வீம்புபேசிடார் *
மெய்யன்பதநாடுவாரென்றாடாய்பாம்பே. (௪௯)

பெண்ணாசை விலக்கல்,

வெயில்கண்டமஞ்சள்போன்றமாதரழகை *
விரும்பியேமேல்விழுந்துமேவுமாந்தர் *
ஒயில்கண்ட விலவுகாத்தோடுங்கிளிபோல் *
உடல்போனாலோடுவாரென்றாடாய்பாம்பே. (௫௰)

செண்டுமுலைவண்டு விழிகொண்டதேனாளைச் *
சித்தப்பாம்பால்விழுங்கியேசீயென்றொறுத்தோம் *
குண்டுகட்டெருமையேறுங்கூற்றுப்பருந்தைக் *
கொன்றுதின்றுவிட்டோமென்றாடாய்பாம்பே. (௫௧)

வட்டமுலையென்றுமிகவற்றுந்தோலை *
மகமேருவென்றுவமைவைத்துக்கூறுவர் *
கெட்டநாற்றமுள்ளயோனிக்கேணியில்வீழ்ந்தார் *
கெடுவரென்றேதுணிந்தாடாய்பாம்பே. (௫௨)

மலஞ்சொரிகண்ணைவடிவாளுக்கொப்பாக *
வருணித்துச்சொல்வர்மதிவண்மையில்லாதார் *
குலநலம்பேசுகின்றகூடைகமாந்தர்கள் *
கும்பிக்கேயிரையென்றாடாய்பாம்பே. (௫௩)

சிக்குநாறுங்கூந்தலைச்செழுமேகமாய்ச் *
செப்புவார்கள் கொங்கைதனைச்செப்புக்கொப்பதாய்
நெக்குநெக்குருகிப்பெண்ணைநெஞ்சினினைப்பார் *
நிமலனைநினையாரென்றாடாய்பாம்பே. (௫௪)

நாறிவருமெச்சிறனைநல்லமுதென்று *
நண்ணுஞ்சளிநாசிதனைநற்குமிழென்றுங் *
கூறுவார்கள்புத்தியில்லாக்கூகைமாந்தர் *
கோனிலையையறியாரென்றாடாய்பாம்பே. (௫௫)

மயிலென்றுங்குயிலென்றுமாணிக்கமென்றும் *
மானேயென்றுந்தேனேயென்றும் வானமுதென்றும்
ஒயிலானவன்னமதிற்கொத்தவளென்றும் *
ஓதாமற்கடிந்துவிட்டாடுபாம்பே. (௫௬)

மின்னற்கொடியென்றுஞ்சோதிவிளக்கமென்றும் *
மெல்லியென்றும்வல்லியென்றுமேனகையென்றும் *
கன்னற்கட்டியென்றுஞ்சீனிகற்கண்டென்றும் *
கழறாமற்கடிந்தோமென்றாடாய்பாம்பே. (௫௭)

பூவையென்றும்பாவையென்றும்பொன்மேனியென்று
ம,பூந்திருவேயென்றுமென்றன் பொக்கிஷமென்றும
கோவையென்றுங்கோதையென்றுங் கோகிலமென்
றும், கூறாமற்றுறந்தோமென்றாடாய்பாம்பே.(௫அ)

மலக்கூடீதிலேமஞ்சள்பூச்சென்றும் *
மல்குட்டுப்பூக்கூட்டில்மேல்வண்ணத்தோலென்று

சலக்குழிக்குள்ளேநாற்றஞ்சார்ந்தசேறென்றும் *
தானறிந்துதள்ளிடுமென்றாடாய்பாம்பே. (௫௯)

சரீரத்தின் குணம்.

ஊத்தைக்குழியிலேமண்ணையெடுத்தே *
உதிரப்புனலிலேயுண்டைசேர்த்தே *
வாய்த்தகுயவனார்பண்ணும்பாண்டம் *
வரகோட்டுக்குமாகாதென்றாடாய்பாம்பே. (௬௰)

இருவர்மண்சேர்த்திடவொருவர்பண்ண *
ஈரைந்துமாதமாய்வைத்தசூளை *
அருமையாயிருப்பினுமந்தச்சூளை *
அரைக்காசுக்காகாதென்றாடாய்பாம்பே. (௬௧)

பரியாசம்போலவேகடித்தபாம்பு *
பலபேரறியவேமெத்தவீங்கிப் *
பரியாரமொருமாதுபார்த்தபோது *
பையோடேகழன்றதென்றாடாய்பாம்பே. (௬௨)

சீயுமலமுஞ்செந்நீருநிணமுஞ் *
சேர்ந்திடுநாற்றக்குடமுடைந்தால் *
நாயுநரியும்பேயுங்கழுகும் *
நமதென்றேதின்னுமென்றாடாய்பாம்பே. (௬௩)

நீரிலெழுநீர்க்குமிழிநிலைகெடல்போல் *
நில்லாதுடனீங்கிவிடுநிச்சயமென்றே *

பாரிற்பலவுயிர்களைப்படைத்தவன்றனைப்
பற்றறவேபற்றித்தொடர்ந்தாடாய்பாம்பே. (௬௪)

நாறுமீனைப்பலதரநல்லதண்ணீரால்
நாளுங்கழுவினுமதனாற்றம்போமோ
கூறுமுடல்பலநதியாடிக்கொண்டதால்
கொண்டமலநீங்காதென்றாடாய்பாம்பே. (௬௫)

காய்த்தமரமதுமிகக்கல்லடிபடும்
கன்மவினைகொண்டகாயங்கண்டனைபெறும்
வாய்த்தகவமுடையவர் வாழ்பவரென்றே
வஸ்துத்திருவடிதொழுதாடாய்பாம்பே. (௬௬)

பேசரியநவவாயிற்பீறற்றுருத்தி
பெருங்காற்றிற்புகுந்ததாற் பேச்சுண்டாச்சே
ஈசனிலையறியாருக்கிந்தத்துருத்தி
எரிமண்ணிற்கிரையென்றாடாய்பாம்பே. (௬௭)

மரப்பாவைபோலவொரு மண்ணுருச்செய்து
வளமானசீவனென்னுஞ் சூத்திரமாட்டித்
திரைக்குள்ளிருந்தசைப்போன் றீர்ந்தபொழுதே
தேகம்விழுமென்றுதெளிந்தாடுபாம்பே. (௬௮)

தசநாடிதசவாயு சத்ததாதுச
சார்ந்தமரக்கப்பலது தத்திவிழுமே
இசைவானகப்பலினை யேகவெள்ளத்தில்
எந்நாளுமோட்டத்துணிந்தாடாய்பாம்பே. (௬௯)

அகப்பற்றுநீக்கல்.

தாமரையினிலையிலே தண்ணீர்தங்காத் *
தன்மைபோலச்சகத்தாசை தள்ளிவிட்டெங்கும் *
* தூமணியாய்விளங்கிய சோதிபதத்தைத் *
தொழுதுதொழுது தொழுதாடாய்பாம்பே. (௭௰)

கள்ளங்கொலைகாமமாதி கண்டித்தவெல்லாம் *
கட்டறுத்துவிட்டுஞானக் கண்ணைத்திறந்து *
தெள்ளிதானவெட்டவெளி சிற்சுரூபத்தைத் *
தேர்ந்துபார்த்துச் சிந்தைதெளிந்தாடாய்பாம்பே. ()

சொல்லும்புளியம் பழத்தினோடுபோலவே *
சுற்றத்திருந்தாலுமவர் தொந்தங்களற்று *
நில்லுமனதேபர நின்மலத்திலே *
நின்றுனைதான்வெறும்பாழென் றாடாய்பாம்பே. ()

சேற்றிற்றிரிபிள்ளைப்பூச்சி சேற்றைநீக்கல்போல் *
தேசத்தொத்துவாழ்பவரச் செய்கைகண்டபின் *
சாற்றுபரவெளிதனைச் சாரும்வழியே *
தானடக்கவேண்டுமென் றாடாய்பாம்பே (௭௩)

எண்ணெய்க்குந்தண்ணீர்க்குந் தொந்தமில்லாவாறு
போல், எப்போது மிப்புவியிலெய்தவேண்டும் *
கண்ணுக்குக்கண்ணனவொளி கண்டுகொள்ளவே *
கட்டறுத்துவாழ்ந்திட நின்றாடாய்பாம்பே (௭௪)

* தூமணி-பரிசுத்த இரத்தினம்.

கக்கிவிட்டசோறுகறி கந்தமலங்கள்
கண்களுக்கசுத்தமான காட்சிபோலவே
சிக்கிக்கொண்டசகத்தினைச் சீயென்றொறுத்துச்
சீர்பாதங்காணத் தெளிந்தாடாய்பாம்பே (எ

கோபமென்னுமதயானை கொண்டமதத்தை
கூர்கொள்புத்தியங்குசத்தாற்கொன்றுவிட்டங்கா
தீபமென்னுஞ்சிற்சுரூப செய்யபொருளைச்
சேர்ந்துறவுகொண்டோமென் றாடாய்பாம்பே(எ

நித்தியமென்னுமலையி னின்றுகொண்டுயாம்
நினைத்தபடிமுடித்து நின்மலமானோம்
சத்தியமாயெங்கள் சடந்தானழியாவே
சந்ததமும்வாழ்வோமென் றாடாய்பாம்பே. (எ

மனமென்னுங்குதிரையை வாகனமாக்கி
மதியென்னுங்கடிவாளம் வாயிற்பூட்டிச்
சினமென்னுஞ் சீனிமேற்சீராயேறித்
தெளிவிடஞ்சாரிவிட் டாடாய்பாம்பே. (எ

ஆசையென்னுஞ் செருப்பின்மேலடியைவைத்தே
ஆங்காரமுட்காட்டை யாரமிதித்தே
காசையெனுந்துற்குணக்கிற் கனல்கொளுத்திக்
காலாகாலங்கடந்தோமென் றாடாய்பாம்பே (

ஞாலமென்னுங்கொடிதான கடும்பகையைக் *
கற்பமென்னும்வாளினாற் கடிந்துவிட்டோம் *
சாலப்பிறப்பிறப்பினைத் தான்கடந்தோம் *
தற்பரங்கண்டோமென் றாடாய்பாம்பே. (அ௰)

தேனில்வீழ்ந்தவீயைப்போலச் சிந்தையுலர்ந்து *
திகையாமற்சிற்சுரூப தெரிசனைகண்டு *
வானிற்பறந்திடச் சூதவாண்மணிதீர்ந்து *
வாயிற்போட்டேக நின்றாடாய்பாம்பே. (அக)

தூக்கியபாதங்கண்டேன் சோதிகண்டேன் *
சுத்தவெளிக்குள்ளேயொரு * கூத்தன்கண்டேன் *
தாக்கியசிரசின்மேல் வைத்தபாதம் *
சற்குருவின்பாதமென் றாடாய்பாம்பே. (அஉ)

ஆலடிப்பொந்திலே வாழ்ந்தபாம்பே *
அரசடிப்பொந்திலே புகுந்துகொண்டாய் *
வாலடிதன்னிலே பார்த்துப்பார்த்து *
வாங்கியேதூங்கிநின் றாடாய்பாம்பே. (அங)

நாலுதெருவிலே நாலுகம்பம் *
நடுத்தெருவிலே பொன்கம்பம் *
போலும்விளங்கு பொன்னங்கம்பத்திலுக்கே *
பூமாலைசூட்டி நின்றாடாய்பாம்பே. (அச)

* கூத்தன் - சிவன்.

ஆழிபெயர்ந்தாலு மேருமட்டமலையும்
அடியோடேபெயர்ந் தாலுமன்றிக்கால
ஊழிபெயர்ந்தாலு மாதியுண்மையடிக்கே
உறுதிபெயராதுநின் றாடாய்பாம்பே. (அ

வாயுவினையிரையாக வாங்கியுண்டே
வருஷிக்குநீரினை வாயுண்மடுத்தே
தேயுவினிற்குளிர்காய்ந்து விட்டவெளியில்
திசைப்பறச்சேர்ந்துநின் றாடாய்பாம்பே (அ

மாசில்கதிவளையிலே மண்டலமிட்டே
மதியானபெரும்பட மடல்விரித்தே
ஆசில்பராபரமான வாதிபதத்தை
அடுத்தடுத்தேதுதித் தாடாய்பாம்பே. (அ

காடுமலைதிருப்பதி காசிமுதலாக்
கால்கடுக்கவோடிற் பலன்காணலாகுமோ
வீடுபெறும்வழிநிலை மேவிக்கொள்ளவே
வேதாந்தத்துறையினின் றாடாய்பாம்பே (அ

எள்ளளவுமன்பகத் திலில்லாதார்முத்தி
எய்துவதுதொல்லுலகி லில்லையெனவே
கள்ளப்புலன்கட் டறுத்துக் காலகாலனைக்
கண்டுதொழுதேகளித் தாடாய்பாம்பே. (அ

நரியனைக்கண்டபணி தூரவோடல்போல் *
தொக்தபந்தஞ்சிந்தபரி சுத்ததலத்தில் *
ஆரியனைக்கண்டுதெரி சித்தேயன்புடன் *
அகலாமற்பற்றிதொடர்ந் தாடாய்பாம்பே (கூ0)

ரசதம்வலியிரும்பு பொற்காசின்மனதைக்
காட்சியானவஸ்துவுடன் கலக்கச்சேர்த்துச் *
சாந்தமுடன்றேண்டியுந் தாம்புமபோலச் *
ஒழியாமற்றொடர்ந்து நின்றாடாய்பாம்பே (கூக)

புளியிட்டகற்சிலையி லுண்டோயலன்கள் *
உலகத்தின்மூடர்க ளுக்குண்டோவுணர்ச்சி *
புளியிட்டசெம்பிற்குற்றம் போமோவஞ்ஞானம் *
போகாதுமூடர்க்கென் றாடாய்பாம்பே. (கூஉ)

இருளானபோரிலூசி தேடல்போன்முத்தி *
கிட்டாதுதேசாசார தேசிகர்தம்மால் *
அருளானமூலகுரு வையர்செயலால் *
ஆனந்தங்கண்டோமென் றாடாய்பாம்பே. (கூங)

சுட்டுச்சுரைக்காய்க்கறிக் கெய்திடாதுபோல் *
அண்டிசைத்திரிந்துங்கதி யெய்தவிலையே *
வீட்டுக்கொருகோயில்கட்டி நாளும்பூசித்தே *
தன்பாதங்காணார்களென் றாடாய்பாம்பே. (கூச)

* ஆரியன்-எப்பொருட்கு மிறைவன்.

தன்னையறிந்தொழுகுவோர் தன்னைமறப்பார்
தன்னையறியாதவரோ தன்னைக்கட்டுவார்
பின்னையொருகடவுளைப் பேணநினையார்
பேரொளியைப்பேணுவாரென் றாடாய்பாம்பே.

பாலிற்சுவைபோலுமெங்கும் பாய்ந்தவொளியை
பற்றப்பொன்பற்றவைத்த பான்மைபோலே
காலிற்சுழிமுனைநின் று கண்டுகொண்டு
களித்துக்களித்துநின் றாடாய்பாம்பே. (

தேக்கெடுத்தேயோடும்வானத் தேனையுண்டபின்
தேகபந்தங்கொண்டனமித் தேசவாழ்வினை
ஓக்காளமென்றெண் யோகையுடனீ
உள்ளந்தெளிந்தேநின் றாடாய்பாம்பே. (

சதுர்வேதமாறுவகை சாத்திரம்பல
தந்திரம்புராணங்கலை சாற்றுமாகமம்
விதம்விதமானதான வேறுநூல்களும்
வீணானநூல்களென் றாடாய்பாம்பே, (

சமயபேதம்பலவான சாதிபேதங்கள்
சகந்தோர்க்கேயல்லதுசர்ச் சாதுகளுக்கோ
சிமயத்திலேறினபேர் சித்தமாறுமோ
சித்தர்சித்தாந்தந்தெளிந் தாடுபாம்பே. (

பூசைசெய்ததால்சுத்த போதம்வருமோ *
பூமிவலஞ்செய்ததாற் புண்ணியமுண்டோ *
ஆசையற்றகாலத்திலே யாதிவஸ்துவை *
அடையலாமென்று துணிந் தாடாய்பாம்பே. (ாா)

மூலவேரறிந்துகொண்டன் மூன்றுலகமும் *
முன்பாகவேகண்டுநித்ய முத்திசேரலாம *
சாலவேரறிந்ததாலே தான்பயனுண்டோ *
சகத்தைப்பொய்யென்றுதெளிந் தாடாய்பாம்பே. ()

சகத்தாதியென்றிடாது தானநாதியாய்ச் *
சமைந்ததென்றுரைப்பார்கள் சத்தையறியார் *
மகத்துவமிலைகற்ப வன்மையல்லாது *
மற்றும்வன்மையில்லையென் றாடாய்பாம்பே. (ாஉ)

ஆயிரத்தெட்டிதழ்வீட்டி லமர்ந்தசித்தன் *
அண்டமெல்லாநிறைந்திடு மற்புதசித்தன் *
காயமில்லாதோங்கியுயர் காரணசித்தன் *
கண்ணுள்ளொளியானென் றாடாய்பாம்பே.(ாங)

நாற்பத்துமுக்கோணமிலே நாப்பணதாக *
நாடுமக்கரச்சுரூப நாயகந்தனை *
மேற்படுத்திக்கொண்டாலந்த மேலுலகெலா *
மெல்லடிக்குத்தொண்டேயென் றாடாய்பாம்பே ௪()

கண்டவர்களொருக்காலும் விண்டவர்களல்
விண்டவர்களொருக்காலுங் கண்டவர்களல்
கொண்டகோலமுள்ளவர்கள் கோணிலைகாணார்
கூத்தாடிக்கூத்தாடி யாடுபாம்பே. (ரு

ஆறுகலைக்குச்சுக்குள்ளே பாடுமொருவன்
அயல்வீட்டுப்போகுமுன்னே *யரண்கோலிக்கொ
வேறுபட்டாலவன்றனை மீட்டலரிதே
மேவுமுன்னேவிடாதுகொண்டாடுபாம்பே. (ரு

எண்ணரியபுண்ணியங்க ளெல்லாஞ்செய்துமென்
வகனடிநெஞ்சமதி லெண்ணவிடிலே
பண்ணரியதவப்பயன் பத்தியில்லையேன்
பாழ்படுமென்றேதுணிந் தாடாய்பாம்பே. (ரு

எவ்வுலகுஞ்சொர்ந்தமதா யெய்தும்பயனென்
எங்களாதிபாதாம்புய மெண்ணக்காலையில்
இவ்வுலகவாழ்வுதானு மின்றேயறுமென்
றெண்ணிக்கர்த்தனடிநினைந் தாடாய்பாம்பே. (ரு

மணக்கோலங்கண்டுமிக மனமகிழ்ந்து
மக்கண்மனைசுற்றத்தோடு மயங்கிநின்றாய்
பிணக்கோலங்கண்டபின்னுந் துறவாவிட்டால்
பிறப்புக்கேதுணையென் றாடாய்பாம்பே. (ரு

* அரண் - இது பேரின்பநிலை.

பிறப்பையுமிறப்பையு மற்றுவிடயான் *
பெருமருந்தொன்றுசொல்வேன்பெட்புடன்கேளாய்
இறப்புடனமனப்பூட்டுஞ் சிந்தைக்கதவும் *
இறந்திடும்வகையறிந் தாடாய்பாம்பே. (௱ம)

இறந்தவ*ரைவரவரிஷ்டமானவர் *
எய்துமவரிறந்தாலொன்றெல்லவர்க்குஞ்சொல் *
மறந்தவரொருவனொன்றே மண்ணிலுள்ளோர் *
வகையறிந்திடவேநின் றாடாய்பாம்பே. (௱மக)

(நாண்கடிச் செய்யுள்.)

ஆகாரமுதலிலேபாம்பதாக *
ஆநந்தவயலிலேபடம்விரித்தே *
ஊகாரமுதலிலேயொத்தொடுங்கி *
ஓடிவகாரத்திணுக்கைகீட்டிச் *
சிகாரங்கிடந்தமேதார்மந்திரத்தைச் *
சித்தப்பிடாரனார்போதஞ்செய்ய *
மாகாரப்பிறப்பையும்வேரறுத்து *
மாயபந்தங்கடந்தோமென் றாடாய்பாம்பே. (௱மஉ)

தந்திரஞ்சொல்லுவார்தம்மையறியார் *
தனிமந்திரஞ்சொல்வார்பொருளறியார் *
மந்திரஞ்செபிப்பார்கள்வட்டவீட்டினுள் *
மதிலினைச்சுற்றுவார்வாயல்காணார் *
அந்தரஞ்சென்றுமேமேவர்பிடுங்கி *
அருளென்னுஞானத்தாலுண்டைசேர்த்தே *

* ஐவர்-பஞ்சபூதம்.

இந்தமருந்தினைத்தின்பீராகில்
இனிப்பிறப்பில்லையென் றாடாய்பாம்பே. (௱௰௩)

களிமண்ணினாலொருகப்பல்சேர்த்தே
கனமானபாய்மரங்களைநாட்டி
அளிபுலந்தன்னையுசுக்கைக்கி
அறிவென்னுமாதாரச்சீனிதூக்கி
வெளியென்னும்வட்டத்தேயுள்ளடக்கி
வேதாந்தக்கடலினைவெல்லவோட்டித்
தெளிவுறுஞானியாரோட்டுங்கப்பல்
சீர்பாதஞ்சேர்ந்ததென் றாடாய்பாம்பே. (௱௰௪

உள்ளத்துக்குள்ளேயுணரவேண்டும்
உள்ளும்புறம்பையுமறியவேண்டும்
மெள்ளக்கனலையெழுப்பவேண்டும்
வீதிப்புனலிலேசெலுத்தவேண்டும்
கள்ளப்புனலைக்கடிந்துவிட்டுக்
கண்ணுக்குழைக்குமேற்காணநின்று
தெள்ளுபரஞ்சோதிதன்னைத்தேடிச்
சீர்பாதங்கண்டோமென் றாடாய்பாம்பே. (௱௰௫

ஓங்காரக்கம்பத்தினுச்சிமேலே
உள்ளும்புறம்பையுமறியவேண்டும்
ஆங்காரக்கோபத்தையறுத்துவிட்டே
ஆநந்தவெள்ளத்தைத்தாக்கிக்கொண்டே

சாங்காலமில்லாமற் றாணுவுடனே *
சட்டதிட்டமாகச்சேர்ந்துசாந்தமாகவே *
தூங்காமற் றூங்கியேசுகமடைந்து *
தொந்தோந்தொந்தோமென் றாடாய்பாம்பே.(௱௰௬)

விரகக்குடத்திலேயாம்படைப்போம் *
வேதாந்தவெளியிலேவிட்டாட்டுவோம் *
கரணங்களைப்பிடுங்கியினாகொடுப்போம் *
காலக்கடுவெளியின் றூட்டுவிப்போம் *
துரகதந்தனிலேறித்தொல்லுலகெங்கும் *
சுற்றிவலம்வந்துநித்யசூட்சுமங்கண்டும் *
உரையற்றமந்திரஞ்சொல்லிமீட்போம் *
* ஒருநான்கும்பெற்றோமென் றாடாய்பாம்பே(௱௰௭)

காயக்குடத்திலேநின்றபாம்பைக் *
கருணைக்கடலிலேதியங்கவிட்டு *
நேயச்சுழிமுனைநீடுபாய்ச்சி *
நித்யமானவஸ்துவைநிலைக்கநாடி *
மாயப்பெருவெளிதன்னிலேறி *
மாசற்றபொருளினைவாய்க்கத்தேடி *
ஆயத்துறைகடந்தப்பாற்பாழின் *
ஆநந்தஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. (௱௰௮)

மூலத்தலத்திலேநின்றகருத்தை *
முற்றுஞ்சுழிமுனைதன்னிலூடே *

* ஒருநான்கு- நாற்பதவி.

மேலத்தலத்திலேவிந்துவட்டம் *
மேலைவழியிலேமேவிவாழும் *
பாலத்ததாயககருணையினால் *
பரகதிஞானசுரூபமாகி *
ஆலசசயனத்துமாலுடனின்றே *
ஆநந்தஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. (௱௰௯)

புலனைந்துவீதியில்லையாளியாயும் *
புரவியெனுமனதையொன்றுபடுத்தி *
மலமந்தவுலகங்கடந்தாலே *
மன்னுகுருபாதத்தினிலாடித் *
தலமைந்துபூலோகங்கடந்தாலே *
சந்திரமண்டலங்கடந்தாகும் *
அலைவந்துபூலோகக்கடலைநீக்கி *
ஆநந்தமாகிநின் றாடாய்பாம்பே. (௱௨௰)

குருவென்னுமாசானுருவெடுத்துக் *
குறியானஞானத்துபாக்கியாக்கி *
அருளென்னுமருளேயுண்டையாக்கி *
ஆநந்தமாகவேயதைக்கடந்தே *
மருளென்னுமாந்தர்தங்கோரிற்செறு *
வாங்காமலெறிந்திடகெட்டையிட்டுப் *
பருவலைக்குள்ளேபட்டதென்றே *
பற்றினைப்பற்றிநின் றாடாய்பாம்பே. (௱௨௧)

கன்னாண்குகையிலே காண்மறிப்போம் *
கருமானுலையிலே தீமூட்டுவோம் *
சொன்னார்தலையிலே பொன்னுருக்குவோம் *
சுருதியுருக்கல்வி யொப்பஞ்செய்வோம் *
மின்னார்கள்பாசத்தை விட்டெறிப்போம் *
மெய்ப்பொருட்குறிகண்டு விருப்படைவோம் *
பண்ணாதேபண்ணாதே சும்மாவிரு *
பராபரஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. (௱௨௨)

சாதிப்பிரிவிலே தீமூட்டுவோம் *
சந்தவெளியினிற் கோல்நாட்டுவோம் *
வீதிப்பிரிவினில் விளையாடுவோம் *
வேண்டாதமனையி லுறவுசெய்வோம் *
சோதித்துலாவியே தூங்கிவிடுவோம் *
சுகமானபெண்ணையே சுகித்திருப்போம் *
ஆதிப்பிரம்மாக்க ளைந்துபேரும் *
அறியார்களிதையென் றாடாய்பாம்பே (௱௨௩)

நெட்டெழுத்ததனிலே நிலைபிடித்து *
நீங்கவெழுத்திலே வாலைமுறுக்கி *
விட்டவெழுத்திலே படம்விரித்து *
விண்ணின்வழியிலே மேவியாடிப் *
பட்டவெழுத்தையும் பதிந்திருப்போம் *
பன்னிரண்டாமெழுத்தினிற் பன்னிச்கூடிப் *
திட்டமுடனெமக் கருடேசிகனார்தஞ் *
சீர்பாதஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே (௱௨௪)

ரப்பர்
ஒட்டு
5-9-90.